IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.51/2018
DEPOSITION OF WITNESS

<u>வா.சா. 2சாட்சி சண்முகவள்ளி க.பெ.சந்திரன்</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif on 09.06.2026 in accordance with the provisions of Act XX141.**

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. 1ம் வாதி என்ன உறவு என்றால் அப்பாவின் உடன் பிறந்த சகோதரர் ஆவார். எனக்கு சித்தப்பா ஆவார். 2 முதல் 5 வாதிகள் 1ம் வாதியின் மக்கள் என்றால் சரிதான். 1ம் வாதிதான் ஆரம்மமுதலே வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்யும் போது என்ன பிரச்சனை என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது சித்தப்பாவிற்கு பாத்தியப்பட்டது 5 செண்டுதான் என்றால் சரிதான். அதற்கு சர்வே எண்ணோ அல்லது அடி அளவுகள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது சித்தப்பா சொத்திற்கு தென்புறம் 5 செண்டை எனது தகப்பனார் நாகு தான செட்டில்மெண்டு மூலம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கும் சர்வே எண் அடி அளவுகள் தெரியாது என்றால் சரிதான்.

2. பெரியபாண்டி என்பவர் என் தகப்பனாரின் மூத்த சகோதரர் ஆவார் என்றால் சரிதான். எனது சித்தப்பா 1ம் வாதி சொத்திற்கு கிழக்கு பக்கம் எனது பெரியப்பா பெரியபாண்டிக்கு பாத்தியப்பட்ட 10 செண்டு உள்ளது என்றால் சரிதான். பெரியபாண்டியின் மகன் பெயர் பாலு என்றால் சரிதான். பெரியபாண்டி எப்போது இறந்தார் என்றால் 1996 ஆகும். எனது நிரூபண வாக்குமூலத்தில் என்ன விபரம் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 4 ல் பெரியபாண்டி இறப்பிற்கு பிறகு அவரது 10 செண்டு நிலத்தினை அவரது மகனான பாலு

என்பவர் அடைந்து அனுபவம் செய்து வந்தார் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் தவறாக கூறப்பட்டுள்ளது. பாலுவின் மனைவி பெயர் ஜெயா என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ஜெயாவிற்கு பாலு என்பவர் ஒரு செட்டில்மெண்டு பத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் தெரியாது. மேற்படி சங்கதிகளை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு என்ன பத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்பது தெரியாது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தையும் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். 1ம் வாதி கோபால் இறந்து 5 வருடங்கள் ஆகிறது என்றால் சரிதான்.

3. 1ம் வாதி இறந்த காலத்திலும், அதற்கு பின்னிட்ட காலத்திலும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் யார் யார் பிரதிவாதிகள் என்று தெரியாது என்றால் சரிதான். என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியாது என்றால் சரிதான். 4ம் வாதி ரமேஷ் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். 4ம் வாதி ரமேஷ் தயார் செய்து கொடுத்த நிரூபண வாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்துள்ளேன், அதில் உள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.06.10 09:52:30 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருமங்கலம்.